# **Attention / கவனம்**

*ஜெபிக்கக் கூடியிருக்கிறோம். . நமது ஜெபத்தைக் கவனமாக கேட்கிறவர் நமது ஆண்டவர். .*

**Let us pray**

1 பேதுரு/ 1 Peter 3:12 *(பக்கம் 320)*

கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, **அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது;** தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது.

For the eyes of the Lord are on the righteous and his ears are attentive to their prayer, but the face of the Lord is against those who do evil." (NIV) ……and his ears are open unto their prayers: (KJV)

*அவருடைய கிருபையினால் நாம் நீதிமான்களாயிருக்கிறோம். .. .*

*நமது வேண்டுதல்களை அவர் கவனமாக கேட்கிறார். . . பதில் தருகிறார். . . ஆமென்.*

*அதேபோல் நாமும் அவரது வார்த்தைக்கு கவனமாக செவிகொடுக்க வேண்டுமென விரும்புகிறார். .*

நீதிமொழிகள்/ Proverb 4:20 *(பக்கம் 766)*

என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.

My son, pay attention to what I say; listen closely to my words. (NIV)

My son, attend to my words; incline thine ear unto my sayings. (KJV)

**சும்மா கவனிப்பது மட்டுமல்ல, ஜாக்கிரதையாக கவனிக்க சொல்கிறார்.. . ..**

எபிரெயர்/Hebrews 2:1 *(பக்கம் 298)*

ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டுவிலகாதபடிக்கு, அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

We must pay more careful attention, therefore, to what we have heard, so that we do not drift away.(NIV)

**கவனிப்பது மட்டுமல்ல . . .. . . . . அதன்படி செய்யவேண்டும். . என்று விரும்புகிறார். .**

யாக்கோபு/James 1:22 *(பக்கம் 313)*

அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

Do not merely listen to the word, and so deceive yourselves. Do what it says.(NIV)

**இப்படி நாம் இருப்போமானால், அவரது கிருபையினால் நீதிமான்களாய் ஆன நாம் அவரைப்போலவே பரிசுத்தமாய் இருப்போம். பரிசுத்தமில்லாமல் தேவனை ஒருவரும் தரிசிக்க முடியாது. . (எபி. 12:14)**

பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன். என்று இயேசுகிறிஸ்து சொன்னது போல நாமும் சொல்லவேண்டும் (யோ. 17:4)

*ஒரு சம்பவத்தை குறித்து தியானித்து ஜெபிப்போம். .*

(ஒரு சில வாரங்களுக்கு முன் ஒரு ஞாயிறு ஆராதனையிலே. . விசுவாசத்தைக் குறித்த ஒரு தேவசெய்தியிலே. . எண்ணாகமம்/Numbers 20:12 *(மோசே. . காணான் தேசத்துக்கு போகமுடியாமல் போய்விட்டது. . ) என்பதை தியானித்தோம்)*

*இஸ்ரவேல் மக்களுக்கு தண்ணீர் இல்லை என்பது ஒரு பிரச்னை. . .அதற்கு தண்ணீர் வேண்டுமென கேட்பதற்கு பதிலாக எவ்வளவு வார்த்தைகளை அங்கே மக்கள் கொட்டுகிறார்கள். . .என்பதை நீங்கள் அந்த அதிகாரத்தை முழுக்க நேரம் இருக்கும் போது வாசியுங்கள். . நமது வார்த்தைகளில் கவனம் வேண்டும். ..*

எண்ணாகமம்/Numbers 20:7-8 *(பக்கம் 196)*

கர்த்தர் மோசேயை நோக்கி:

நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்.

The LORD said to Moses, "Take the staff, and you and your brother Aaron gather the assembly together. Speak to that rock before their eyes and it will pour out its water. You will bring water out of the rock for the community so they and their livestock can drink." (NIV)

**இது கர்த்தர் சொன்னது. . .**

எண்ணாகமம்/Numbers 20:9-11

அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளையிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி,

தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய் புறப்பட்டது, சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது.

So Moses took the staff from the LORD's presence, just as he commanded him. 10 He and Aaron gathered the assembly together in front of the rock and Moses said to them, "Listen, you rebels, must we bring you water out of this rock?" 11 Then Moses raised his arm and struck the rock twice with his staff. Water gushed out, and the community and their livestock drank. (NIV)

**இது மோசே செய்தது. .**

எண்ணாகமம்/Numbers 20:12

பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார்.

But the LORD said to Moses and Aaron, "Because you did not trust in me enough to honor me as holy in the sight of the Israelites, you will not bring this community into the land I give them." (NIV)

….you did not trust me enough to demonstrate my holiness to the people of Israel… (NLT)

….ye believed me not, to sanctify me in the eyes of the children of Israel…. (KJV)

…..you did not believe in (rely on, cling to) Me to sanctify Me in the eyes of the Israelites. (AMP)

…..you did not have enough faith to acknowledge my holy power before the people of israel(GNB)

**இது கர்த்தர் பதில் சொன்னது. .**

எண்ணாகமம்/Numbers 27:14 *(பக்கம் 208)*

சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணவேண்டிய நீங்கள் **என் கட்டளையை மீறினீர்களே** என்றார். இது சீன் வனாந்தரத்தில் காதேஸ் ஊர்அருகே உண்டான மேரிபாவின் தண்ணீருக்கடுத்த காரியமே.

for when the community rebelled at the waters in the Desert of Zin, both of you disobeyed my command to honor me as holy before their eyes." (These were the waters of Meribah Kadesh, in the Desert of Zin.) (NIV)………… [by strict obedience to My authority] ….(AMP)

***அவருடைய கட்டளையை அப்படியேச் செய்ய கவனம் எடுக்காததால் வந்த விளைவு. . ..***

மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான். (எண். 12:3)

. . . என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன். **என்று கர்த்தர் சொல்கிறார். . (எண். 12: 7)**

**இப்படிப்பட்ட மோசே. . .கர்த்தருடைய கட்டளையை மீறினதால். . .சரியாக அவரது கட்டளையைச் செய்யாததால். . . .அவர் கொடுக்க இருந்த தேசத்தை அடையாமல் போக நேர்ந்தது. . . ..**

**இதிலே இன்னொன்றை கவனியுங்கள். . .**

**அவரது கட்டளையை சரியாக செய்யாவிட்டாலும். . . அங்கே அவர் சொன்னபடி தண்ணீர் வந்தது. .**

***(நேரம் இருக்கும்போது இந்த அதிகாரங்களை வாசியுங்கள். . . .)***

**அவர் கிருபையுள்ளவர். . .நமக்கு விண்ணப்பங்களுக்கு செவிகொடுப்பவர். . . .**

**அவர் நமது விண்ணப்பங்களை நிறைவேற்றுவது ஒன்று. ..**

**அவரையே நாம் முடிவிலே தரிசித்து சேர்வது மற்றொன்று. . . சிந்திப்போம்.. . . .**

**அப்படி நாம் அவரைச் சேர்வது மட்டுமல்ல. . .**

**நமது சகோதர சகோதரிகளையும் அழைத்துச் செல்லவேண்டும். . . . சிந்திப்போம். . .**

**நமது விண்ணப்பங்களுக்கு கவனமாக செவி கொடுத்து, நிறைவேற்றுகிற நமது ஆண்டவருக்கு, நாம் அவர் கட்டளைகளுக்கு செவிகொடுத்து, அதன்படி நடக்க பிரயாசப்பட, அவரது கிருபையை நமக்குத் தர அவரிடம் வேண்டுவோம். .. ஆமென்.**

**இந்த ஜீவனுள்ள வசனங்கள் நம் அனைவரையும் கர்த்தருக்குள் விழித்தெழச் செய்யுமென விசுவாசிக்கிறேன். .. ஆமென் .**